புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • ஜூன் (JUNE) 11, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 24 • விலை(PRICE) ரூ.6.00

## கோவையில் பேருந்து தீண்டாமை முடிவுக்கு வந்தது
# கழகத்தின் இடைவிடாத போராட்டத்திற்கு வெற்றி!

கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் அருகே உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் வாழும் கெம்பனூர் கிராமத்தில் நீண்ட காலமாக இருந்து வந்த பேருந்து தீண்டாமையை முடிவுக்கு கொண்டு வந்திருக்கிறது திராவிடர் விடுதலைக் கழகம். பெரியார் நடத்திய வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவை கொண்டாட்டமாக நடத்தாமல் கிராமங்களில் நிலவும் தீண்டாமை அவலங்களின் பட்டியலை தயாரிக்கும் செயல்திட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் இறங்கியது. அப்போதுதான் இந்த பேருந்துத் தீண்டாமை கவனத்திற்கு வந்தது.

பேருந்து நிற்கும் இறுதி முனையமாக இந்த ஊர் இருந்த காரணத்தினால் பட்டியல் இனப் பிரிவினர் பேருந்துகளில் உட்கார்ந்து விடுகிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக கட்சிகளைக் கடந்து ஆதிக்க ஜாதியினர் கைகோர்த்துக் கொண்டு பேருந்து ஊருக்கு வராமல் தடுப்பதில் ஜாதி வெறியுடன் முரட்டுப் பிடிவாதம் காட்டி வந்தனர். திராவிடர் விடுதலைக் கழகம் பலமுறை போராட்டங்கள் நடத்தியும் கவனத்தில் கொண்டு வந்தும் போக்குவரத்துத் துறை அலட்சியம் செய்தது.

இந்தக் கோரிக்கைக்காக திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் தமிழ்நாடு முழுவதும் பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்கள் திரண்டு கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் முற்றுகைப் போராட்டம் நடத்தியும் நிர்வாகம் ஜாதி வெறியர்களுக்கு பணிந்து நின்றது. தற்போது சமூக நீதித்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள வன்னி அரசு அவர்களின் கவனத்திற்கு இந்த தீண்டாமை பிரச்சனை குறித்து தோழர்கள் கொண்டு சென்றனர். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வர அழுத்தம் தந்த பிறகும் நிர்வாகம் சில நாட்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. அதைத் தொடர்ந்து மீண்டும் கழகத் தோழர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்த பிறகு பேருந்து தீண்டாமை முடிவுக்கு வந்திருக்கிறது. கழக கோவை மாநகரத் தலைவர் நிர்மல் குமார் இந்த ஒற்றை கோரிக்கைக்காகவே தொடர்ந்து பதிவுகளை சமூக ஊடகங்களில் வெளியிட்டு வந்தார். இப்பிரச்சினையில் கவலையோடு தலையிட்டு செயல்பட்ட அமைச்சர் வன்னிஅரசு அவர்களுக்கு கழகத்தின் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கலைஞர் ஆட்சிக் காலத்தில் பட்டியல் இனத்தின் தலைவர் போராளி சுந்தரலிங்கம் பெயரை தென் மாவட்டங்களில் போக்குவரத்துக் கழகத்திற்கு சூட்டிய போது அந்தப் பெயர் சூட்டிய பேருந்துகளை தங்கள் ஊருக்கு வரக்கூடாது



என்று ஜாதி வெறியர்கள் தடுத்து நிறுத்தி பெரும் கலவரத்தில் இறங்கினர். அப்போது அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை கலைஞர் கூட்டி அனைத்து மாவட்டப் பேருந்துகளுக்கும் சூட்டப்பட்ட அனைத்துத் தலைவர்களின் பெயர்களையும் நீக்கும் முடிவை எடுத்ததோடு பெரியார் சமத்துவபுரம் திட்டத்தை அறிவித்தார். இது ஊர் சேரி பாகுபாட்டை ஒழிக்கும் ஒரு முன்னோடித் திட்டம். இந்தியாவில் இதுபோன்று ஒரு திட்டம் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை.

பெரியார் திராவிடர் கழகமாக "தேநீர் கடைகளில் இரட்டை டம்ளர் உடைப்பு, திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய அகமண முறை எதிர்ப்பு, ஜாதி வாழ்வியல் எதிர்ப்பு" என்று தமிழ்நாடு முழுதும் பரப்புரை இயக்கங்களை, போராட்டங்களை கடும் எதிர்ப்புகளை எதிர்கொண்டு நடத்தியது வரலாறு. திராவிடர் விடுதலைக்கழகம் "சுயஜாதிப்பற்றோடு ஜாதி எதிர்ப்பு பேசுவது ஜாதி எதிர்ப்பல்ல!" என்ற கருத்தில் உறுதியோடு நிற்கிறது. திராவிடர் விடுதலைக் கழகம் இப்போது இந்தப் பேருந்து தீண்டாமையை முடிவிற்கு கொண்டு வந்திருப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். இந்த லட்சிய பயணத்தை நோக்கி இறுதி வரை மேலும் வேகத்தோடு களத்தில் கழகம் போராடும்.

அரசியல் அதிகாரம் மட்டுமே சமூக மாற்றத்தை கொண்டு வராது என்ற பெரியார் கொள்கை வெளிச்சம் பெரியார் இயக்கங்களை வழி நடத்திக் கொண்டிருக்கிறது. பெரியார் இயக்கமான சமுதாய இயக்கம் தொடர்ந்து நடத்திய போராட்டங்கள் அழுத்தத்தின் காரணமாகவே இந்த வெற்றி கிடைத்திருக்கிறது. உயர் ஜாதிப்பற்றுடன் வெளியிடும் அவதூறு அறிக்கைகளைப் புறந்தள்ளுவோம்.

**விடுதலை இராசேந்திரன்,**
**பொதுச்செயலாளர்**

தன் கவனத்துக்கு வந்தவுடன் அங்கு பேருந்து செல்ல உத்தரவிட்டு - அடுத்த சில நாட்களிலேயே 06.06.26 அன்று மதியம் சமூக நீதித்துறை அமைச்சர் வன்னி அரசு அவர்களின் உத்தரவுப்படி பேருந்து சென்றது. அதை வெற்றிகரமாக செயல்படுத்திய மாண்புமிகு சமூகநீதித்துறை அமைச்சர் வன்னி அரசு அவர்களின் பெயர் வரலாற்றில் நிலைத்து நிற்கும். கத்தியின்றி - இரத்தமின்றி பெரியாரின் வழி நின்று போராடிய திராவிடர் விடுதலைக் கழகத்திற்கு கிடைத்தது வெற்றி; இக்கொடுமையை முடிவுக்கு கொண்டு வருவதில் உறுதியாக இருந்த "திராவிடர் விடுதலைக் கழகம்" இதற்கான தீர்வை நோக்கி பல முனைகளில் ஓடியது. கழகத்தின் தொடர் போராட்டத்திற்கான பலன் 06.06.2026 இன்று கிடைத்திருக்கிறது. "பலன்" என்பதையும் விட கெம்பனூர் அண்ணா நகர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கிடைத்த "விடுதலை" என்றே சொல்லலாம். இதன் மூலம் கெம்பனூர் ஆதிக்க ஜாதிவெறி அரசியல் சக்திகளுக்கு சவுக்கடி கிடைத்திருக்கிறது. திராவிடர் விடுதலைக் கழகத்தின் ஜாதி ஒழிப்பு பணியில் இது ஒரு மைல்கல்.

பேருந்து அண்ணாநகர் சென்று வந்ததை ஒட்டி கழகத் தோழர்கள் கோவை காந்திபுரம் பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கும், எண்-21, பேருந்தில் பயணித்தவர்களுக்கும் இனிப்பு வழங்கி கொண்டாடினர். மேலும் பேருந்தில் ஜாதி எதிர்ப்பு பரப்புரையை, மேற்கொண்டனர். தோழர்கள் சூலூர் பன்னீர்செல்வம், நிர்மல் குமார் வெங்கட், சிவராசு, கிருஷ்ணன், சதீஷ், சத்தியமூர்த்தி தரணி, நவீன் கதிரவன், ஸ்டாலின்ராஜா, சௌந்தர்யா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருப்பரங்குன்றம் விவகாரம் தெளிவுபடுத்திய தவெக அரசு!



மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் சுப்ரமணிய சாமி கோவிலில் உள்ள உச்சிப் பிள்ளையார் கோவிலில் ஆண்டுதோறும் கார்த்திகை தீபம் ஏற்றப்படுகிறது. ஆனால் 'உச்சிப்பிள்ளையார் கோயிலில் அல்ல, மலையின் உச்சியில் உள்ள சிக்கந்தர் தர்காவின் சர்வே கல் பகுதியில்தான் விளக்கு ஏற்ற வேண்டும், அந்த சர்வே கல்தான் தீபத்தூண்' என இந்து அமைப்புகள் கலவரத்திற்கு வித்திட்டு வருகின்றன. முந்தைய திராவிட மாடல் அரசு இவ்விவகாரத்தில் தனது உறுதியான நிலைப்பாட்டை வெளிக்காட்டி, வழக்கம்போல உச்சிப்பிள்ளையார் கோயிலில்தான் தீபம் ஏற்றப்படும் என்பதை உறுதி செய்தது. நீதிமன்றப் படியேறிப் பார்த்தும், சங்கிகளின் கலவர முயற்சி நடக்கவில்லை. மலையை முற்றுகையிட்டு கலவரம் செய்ய காவிகள் முயற்சித்த நொடியில் கூட, *We are not allowing..we will face the consequences...* என்று காவல்துறையை வைத்து தமிழ்நாடு அரசின் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது அன்றைய ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்தச் சூழலில், தமிழ்நாட்டில் ஆட்சி மாறிவிட்ட நிலையில், தற்போதைய புதிய அரசின் நிலைப்பாடு என்ன என்று கேள்வி எழுப்பியிருக்கிறது உயர்நீதிமன்றக் கிளை. தமிழக வெற்றிக்கழகத்தைப் பொறுத்தவரையில் கட்சி தொடங்கி 2 ஆண்டுகள் ஆகிவிட்டாலும், ஆட்சிக்கு வருவதற்கு முன்புவரை, இவ்விவகாரத்தில் துணிச்சலாக எந்தக் கருத்தையும் வெளிப்படுத்தவில்லை. மாறாக, இது தமிழ்நாட்டின் மத நல்லிணக்கத்தை சிதைக்கும் செயல் என்று அறியாமல் பாஜகவும் திமுகவும் திட்டமிட்டு செய்யும் சண்டை என்பதாக கருத்துக்களை வெளிப்படுத்தி வந்தது. ஆனால் ஆட்சிக்கு வந்துவிட்ட பின்பு, இத்தகைய பதிலை ஒரு அரசாக சொல்ல முடியாது என்ற நிலையில் தெளிவான விளக்கத்தை மக்கள் எதிர்பார்த்தனர்.

தவம் - தமிழ் தாசன் ஆகியோர் இணைந்து திருப்பரங்குன்றம் ஃபைல்ஸ் என்ற ஆவணப்படத்தை உருவாக்கியுள்ளனர். திமுக ஆட்சிக்காலத்திலேயே வெளி வந்துவிட்ட இந்த ஆவணப்படம் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமை அலுவலகத்திலும் திரையிடப்பட்டது. தற்போது ஆட்சி மாறிவிட்ட சூழலில், புதுக்கோட்டையில் இந்த ஆவணப்படம் திரையிட அனுமதி மறுக்கப்பட்டது. மேலிட உத்தரவு என்று காவல்துறை கூறியிருக்கிறது. மேலிடம் என்றால் அது யார்? தமிழ்நாடு அரசா அல்லது ஒன்றிய அரசா என தெளிவுபடுத்தவில்லை. இந்தத் திரையிடலை எப்படித் தடுக்கலாம் என கழகப் பொதுச்செயலாளர் கேள்வி எழுப்பிய நிலையில், அவரது பதிவு சென்னை திவிக முகநூல் பக்கத்தில் முடக்கப்பட்டது.

தொடர்ச்சி 4-ம் பக்கத்தில்

# தென் மாநிலங்களை ஓரம்கட்டும் ஒன்றிய அரசு

**ரூ.12,698 கோடி வழங்கப்பட்டு வந்த நிலையில், ஜி ராம் ஜி திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்கு வெறும் ரூ.3,923 கோடி: தென் மாநிலங்களை ஓரம்கட்டும் ஒன்றிய அரசு.** ஒட்டுமொத்த நிதியில், தமிழ்நாடு இதுவரை 10 சதவீத பங்கைப் பெற்று முன்னணியில் இருந்தது. ஆனால், புதிய கணக்கீட்டு முறையின்படி, தமிழ்நாட்டின் பங்கு 4.10 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. முந்தைய காலங்களில் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டின் எதிர்கால நிதி உரிமை, ஒரேயடியாக பாதிக்கும் கீழ் சரிந்துள்ளதை இந்தத் தரவுகள் காட்டுகின்றன.

இதுமட்டுமின்றி, ஜிராம்ஜி திட்டத்தின் கீழ் ஆந்திராவுக்கு 8.8 சதவீதம் வழங்கப்பட்ட நிலையில் 4.20 சதவீதமும், கேரளாவுக்கு 3.94 சதவீதம் வழங்கப்பட்டு வந்த நிலையில் 2.38 சதவீதமும், தெலங்கானாவுக்கு 3.94 சதவீதம் வழங்கப்பட்டு வந்த நிலையில் 2.17 சதவீதமும் குறைப்பட்டுள்ளது. இதனால் தென் மாநிலங்கள் ஓரங்கட்டப்பட்டு இருப்பது வெட்டவெளிச்சமாகி உள்ளது.



ஆனால் பாஜ ஆளக்கூடிய உத்தரபிரதேசத்திற்கு ஒதுக்கப்படும் நிதி 9.67 சதவீதத்தில் இருந்து 17.62 சதவீதமும், பீகாருக்கான நிதி 6.10 சதவீதத்தில் இருந்து 9.95 சதவீதமும், மராட்டிய மாநிலத்திற்கு நிதி 3.99 சதவீதத்திலிருந்து 6.44 சதவீதமும், குஜராத்துக்கு அளிக்கப்படும் நிதி 1.49 சதவீதத்தில் இருந்து 3.76 சதவீதமும் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், இந்த மாற்றியமைக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ஜூலை 1ம் தேதி முதல் அமலுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்திற்கான நிலுவைத் தொகையான ரூ.4,034 கோடியை (கூலி மற்றும் பொருட்கள் பங்கு) ஒன்றிய அரசு நீண்ட நாட்களாக தமிழ்நாட்டிற்கு வழங்காமல் இழுத்தடித்தபோது திமுக சார்பில் மாநிலம் தழுவிய பிரமாண்ட போராட்டங்கள் நடத்தப்பட்டன. கல்வி நிதியை சமக்ர சிக்ஷா அபியான் முடக்குவது, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதியை தராமல் தாமதிப்பது மற்றும் வரிப் பகிர்வில் தமிழ்நாட்டிற்கு தகுந்த பங்களிக்காமல் புறக்கணிப்பது என பல்வேறு தளங்களில் ஒன்றிய அரசு காட்டும் மாற்றாந்தாய் மனப்பான்மையைமு.க.ஸ்டாலின் மக்கள் மத்தியில் வெளிச்சம் போட்டுக் காட்டினார்.

தமிழக முதல்வர் விஜய் உச்ச நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்துவாரா அல்லது போராட்டங்களை முன்னெடுப்பாரா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஆனால் தமிழக அரசு அமைதியாக இருப்பது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

### 12 வருடத்தில் ரூ.87 ஆயிரம் கோடி நிதி

கடந்த 2014 முதல் 2026 வரையிலான காலகட்டத்தில் இந்த ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடமிருந்து ஒட்டுமொத்தமாக ரூ.87,639 கோடியை பெற்றுள்ளது.

நாட்டின் மொத்த நிதியில் 10 சதவீதம் பங்கினை தமிழ்நாடு மட்டுமே பெற்று வந்த நிலையில், தற்போதைய புதிய சட்ட மாற்றங்கள் இந்த நிதிப் பகிர்வை பாதியாகக் குறைத்துள்ளன. கடந்த காலங்களை பொறுத்தவரை 2023 -24 நிதியாண்டில் ரூ.12,698 கோடி, 2024-25 நிதியாண்டில் ரூ.10,156 கோடி, 2025-26 நிதியாண்டில் ரூ.5,878 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பாஜகவுக்கு நெருக்கடி முற்றுகிறது!

## போராட்டத்தில் குதித்த இளைஞர்கள்

கடந்த மாதம் நாடு முழுவதும் உள்ள 5,432 மையங்களில் 22 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் நீட் 2026 தேர்வை எழுதியிருந்தனர். பின்னர் வினாத்தாள் கசிவு உள்ளிட்ட முறைகேடுகள் குறித்த குற்றச்சாட்டுகளால் மே-12 அன்று தேர்வு ரத்து செய்யப்பட்டது. மறுதேர்வு இந்த மாத இறுதியில் நடைபெற உள்ளது. மறுபுறம், சிபிஎஸ்சி அறிமுகப்படுத்திய புதிய On-Screen Marking (OSM) மதிப்பீட்டு முறையில் பல குறைபாடுகள் இருப்பதாக மாணவர்கள் சுட்டிக்காட்டியதால் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது.



அரசு நீட் மறுதேர்வுக்கு உத்தரவிட்டதோடு சிபிஎஸ்சி அதிகாரிகளை இடமாற்றம் செய்திருந்தாலும், அரசியல் பொறுப்பு யாரிடமும் நிர்ணயிக்கப்படவில்லை. இந்நிலையில் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் இந்த சர்ச்சைகளுக்கு பொறுப்பேற்று பதவி விலக வேண்டுமென்று காக்ரோச் ஜனதா கட்சி டெல்லியில் போராட்டத்தில் ஈடுபட்டது.

இன்ஸ்டாகிராமில் 2.2 கோடிப்பேர் இந்த காக்ரோச் ஜனதா கட்சியை பின் தொடருகிறார்கள். வேலையில்லாத இளைஞர்கள் கரப்பான் பூச்சிகள் போல என உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பேசியது இளைஞர்கள் மத்தியில் மாபெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி, அது ஒன்றிய பாஜக அரசுக்கு எதிராக காக்ரோச் ஜனதா கட்சியாக உருவெடுத்து, அவர்கள் முதல் போராட்டக்களத்தையும் அமைத்திருக்கிறார்கள். 2023-ஆம் ஆண்டு மல்யுத்த வீரர்களின் போராட்டத்திற்குப் பிறகு ஜந்தர் மந்தரில் மீண்டும் ஒரு போராட்டக் களம் உருவாகியிருக்கிறது. ஜூன் 6 அன்று நடைபெற்ற இப்போராட்டத்தில் நீட் மற்றும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பங்கேற்றனர். அமெரிக்காவில் இருந்து இந்தியா திரும்பியுள்ள காக்ரோச் ஜனதா கட்சியின் நிறுவனர் அபிஜீத் திப்கே சமூக ஊடகங்களில் விடுத்த அழைப்பை ஏற்று, தன்னெழுச்சியாக பல இளைஞர்கள் இப்போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர். அவர்களில் சில இளைஞர்கள் ஊடகங்களுக்கு அளித்த கருத்துக்கள், இளைஞர்கள் மத்தியில் ஒன்றிய அரசுக்கு எதிரான மனநிலை எவ்வளவு வீரியமாக உள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது.

**சமிக்சா, கல்லூரி மாணவி:** “என் பெற்றோர் என்னை இங்கே வர வேண்டாம் என்றார்கள். நான் என் உரிமைக்காகப் போராடவில்லை என்றால் வேறு யார் போராடுவார்கள்? என் தங்கை தற்போது 12-ஆம் வகுப்பில் படிக்கிறாள்; அடுத்த ஆண்டு பொதுத்தேர்வு எழுத இருக்கிறாள். வினாத்தாள் கசிவுகள் முதல் மதிப்பீட்டு முறைகளைச் சரியாக அமல்படுத்தத் தவறுவது வரை கல்வி அமைப்பில் என்ன நடக்கிறது என்பதை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் அரசியல் பொறுப்பேற்பு எதுவும் இல்லை,” என்றார்.

**ஜஸ்வந்த் வழக்கறிஞர்**: “நாம் ஒரு தேர்தல் சர்வாதிகார நாட்டில் வாழ்கிறோம். அரசாங்கத்திற்கு எதிராக மக்களிடம் கோபம் உள்ளது. எங்களை தேசவிரோதிகள், நகர்ப்புற நக்சல்கள் என்று அழைத்தால், போராட்டம் நடத்துவதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. இந்தப் போராட்டம் இளைஞர்களின் விரக்தியின் வெளிப்பாடு. இந்திய தலைமை நீதிபதியின் அந்த வார்த்தைகள்தான் முதலில் ஒரு நையாண்டியை உருவாக்கின. ஆனால் அது இப்போது ஒரு இயக்கமாக மாறியுள்ளது; தேசிய அளவில் பரவ வேண்டும்.”


**சோமில்ஷியோரன், மருத்துவர்:** இந்தியா பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறது. ஆனால் எங்களை ‘கரப்பான் பூச்சிகள்’ என்று அழைப்பது அவமானப்படுத்துவதாகும். எங்களுக்கு ஆதரவளிக்க முடியாவிட்டாலும், இழிவுபடுத்த வேண்டாம். அமைப்பைச் சரியாக நடத்த முடியாவிட்டால், அவர்கள் ராஜினாமா செய்யத்தான் வேண்டும்.”

**ராபின் மகேஷ்வரி, மருத்துவர்:** “இந்த தலைமுறையினர் கேலிக்குள்ளாக்கப்படுகிறார்கள். போராட்டம் நடத்துவதற்கான இந்த இடமே அரசாங்கத்தை பதறச் செய்கிறது. அரசாங்கத்தில் பரிவு மற்றும் இரக்கம் இல்லாதபோது, அரசியல் தொடர்புகளை ஆராய்வதை விட மக்களிடமிருந்து உருவாகும் இந்த அங்கீகரிக்கப்படாத எதிர்ப்பை நாம் பார்க்க வேண்டும். நாட்டின் எதிர்காலத்தை இளைஞர்களின் உணர்வுகள்தான் நிர்ணயிக்கின்றன. இந்த அமைப்பு எதிர்காலத்தில் வேறு வடிவம் எடுக்கலாம். ஆனால் அது பிற அரசியல் கட்சிகளையும் தங்களைச் சீரமைக்கத் தூண்டும்.”

# தவெக அரசே சமூக அநீதிக்கு துணைபோகலாமா?

தமிழ்நாட்டுக்கு உரிமையான உயர் சிறப்பு மருத்துவ மேல்படிப்புக்கான (super speciality) 152 இடங்களை ஒன்றிய ஆட்சியிடம் சரணடையச் செய்திருக்கிறது தவெக ஆட்சி; எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் இந்த அதிர்ச்சியான தகவலை அம்பலப்படுத்தி இருக்கிறார். தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய்க்கு கடிதம் ஒன்றை எழுதி இருக்கிறார். உச்சநீதிமன்றத்தில் நடந்து வரும் இந்த வழக்கில் திமுக ஆட்சி சரியான வாதங்களை எடுத்து வைத்தது. இந்த இடங்கள் அகில இந்திய கோட்டாவுக்கு சென்று விடாமல் தடுத்து நிறுத்தியது.

இதை அகில இந்திய கோட்டாவுக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று ஒரு தனி நபர் தொடர்ந்த வழக்கில் நடந்த விவாதத்தில் த.வெ.க ஆட்சி சார்பில் வாதிட்ட வழக்கறிஞர் சரண்டர் செய்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளார்; சரியான உறுதியான வாதங்களை எடுத்து வைக்கவில்லை. குறிப்பாக வழக்கு போட்டவர் சுட்டிக்காட்டிய என். எஸ் கார்த்திகேயன் எதிர் தமிழ்நாடு அரசு வழக்கு இந்த வழக்கோடு தொடர்பு இல்லாதது நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர் இதை வலிமையாக மறுத்திருக்க வேண்டும் ஏன் மறுக்கவில்லை? அரசின் சார்பில் நியமிக்கப்படும் வழக்கறிஞர்கள் கொள்கைகளுக்கு எதிரானவர்களாக இருந்துவிடக் கூடாது; இது மிகவும் ஆபத்தானது!




மருத்துவமனையிலேயே பணியாற்றும் மருத்துவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் இவை. இந்தியாவிலேயே சிறப்புமிக்க உயர் மருத்துவர்கள் கொண்ட மாநிலம் தமிழ்நாடு! இதற்காகவே பல்வேறு மாநிலங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் தமிழ்நாட்டை நோக்கி சிகிச்சைக்கு வருகிறார்கள். இதேபோல்தான் மோடி ஆட்சி மருத்துவ மேல் பட்டப்படிப்பில் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டை மறுத்தபோது;தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் சட்டப் போராட்டம் நடத்தி தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; அனைத்து மாநில பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் அந்த இட ஒதுக்கீட்டு உரிமையை மீட்டுத் தந்தார் என்பது வரலாறு!

புதிய ஆட்சி இப்படி ஒரு சமூக அநீதிக்கு துணை போய் இருப்பது வன்மையான கண்டனத்திற்கு உரியது. மீண்டும் பறிகொடுத்த இடங்களை மீட்டுத் தருவதற்கான முயற்சிகளில் தமிழ்நாடு அரசு இறங்க வேண்டும். தமிழ்நாட்டின் தலைசிறந்த மருத்துவக் கட்டமைப்பை ஒருபோதும் சீர்குலைத்து விடக்கூடாது!

**-விடுதலை இராசேந்திரன்.**

# சமூகத்தில் மாறிவரும் உளவியல்

**- மருத்துவர் சிவபாலன்**

அண்மையில் வெளியான மாதிரிப் பதிவு முறை (SRS) புள்ளியியல் அறிக்கை (Sample Registration System (SRS) Statistical Report 2024) புள்ளிவிவரத்தின்படி, இந்தியாவின் மொத்தக் கருத்தரிப்பு விகிதம், அதாவது ஒரு பெண் தன் வாழ்நாளில் பெற்றுக் கொள்ளும் குழந்தைகளின் எண்ணிக்கை அளவு தற்போது 1.9 ஆகக் குறைந்துள்ளது. இது மக்கள்தொகையை நிலைத்திருக்கச் செய்யத் தேவையான 2.1 என்கிற மாற்று நிலையைவிடக் குறைவு. 2014இல் 21ஆக இருந்த பிறப்பு விகிதம் 2024இல் 18.3ஆகக் குறைந்திருக்கிறது. அதே நேரம், இறப்பு விகிதம் 6.7இலிருந்து 6.4ஆக மட்டுமே குறைந்துள்ளது. இந்தியாவின் சராசரியான நடுத்தர வயது 40.2 தற்போது 29.2 சீனாவின் சராசரி நடுத்தர வயது 40.2 பல ஐரோப்பிய நாடுகளில் இது இன்னும் அதிகம். அதே நேரத்தில் இந்தியாவில் தற்போது 15 முதல் 29 வயதுக்குள் உள்ள இளைஞர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 38கோடி. இது நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 27% விழுக்காடாகும். 35 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டும் இந்தியாவின் மக்கள்தொகையில் 65 விழுக்காட்டுக்கும் மேல் உள்ளனர்.

இந்தப் புள்ளிவிவரத்தில் இருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், இந்திய மக்கள்தொகையில் இளைஞர்கள், முதியோரின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்திருக்கிறது. இதை ஒரு தனித்துவமான காலகட்டமாக வல்லுநர்கள் கருதுகிறார்கள். இந்த மாற்றம் வெறும் பொருளாதார மாற்றமோ அல்லது புள்ளிவிவர மாற்றமோ அல்ல, ஆழமான உளவியல் / சமூக மாற்றம் தற்போதைய சமூக - அரசியல் சூழலில் குழந்தைகள், இளைஞர்கள், முதியோர்களின் மனநிலையை எப்படிப் பாதுகாக்கப்போகிறோம் என்பதே இந்தியாவின் மிகப் பெரிய சவால்.



கருத்தரிப்பு விகிதம் குறைவதற்கு நகரமயமாக்கல், கல்வி வளர்ச்சி, குடும்பக் கட்டுப்பாட்டு விழிப்புணர்வு, சிறிய குடும்பங்களை விரும்பும் மனநிலை போன்றவை காரணமாகின்றன. இவை அனைத்தும் வளர்ச்சியின் அறிகுறிகள் என்றாலும், குடும்பங்களின் மரபான அமைப்பையே இவை மாற்றிவருகின்றன. ஒரு காலத்தில் இந்தியக் குடும்பங்கள், தலைமுறை சார்ந்த உறவுகளின் மேல் கட்டப்பட்டிருந்தன. தாத்தா, பாட்டி, உறவினர்கள், பராமரிக்கும் பொறுப்பைப் பகிர்ந்துகொள்வது இப்படியான சூழலில் குழந்தைகள் வளர்ந்தனர். முதியவர்கள் குடும்பத்தின் மையமாக இருந்தனர். குடும்பம் என்பது வெறும் பொருளாதார அமைப்பாக அல்லாமல், அதீத உணர்வுகளை மேலாண்மை செய்யும் அமைப்பாக இருந்தது.

> கல்விப்போட்டி, வேலைவாய்ப்பு பற்றிய அச்சம், சமூக ஒப்பீடு, சமூக வலைத்தள அழுத்தம், வெற்றியை நிரூபிக்க வேண்டிய நிரந்தர மனஅழுத்தம் ஆகியவை குழந்தைகள் இளைஞர்களின் மனநிலையைத் தீவிரமாகப் பாதிக்கின்றன.

இன்று, சமூக ஊடகங்கள் உருவாக்கும் செயற்கை அடையாள உலகம் உண்மையான மனித உறவுகளை மெதுவாக மாற்றிவருகிறது. நூற்றுக்கணக்கான இணையத் தொடர்புகள் இருந்தாலும் உணர்வுரீதியாகப் பாதுகாப்பான உறவுகள் இல்லாத தலைமுறை உருவாகிறது. நகர வாழ்க்கை, வேலைவாயப்புக்காக அடிக்கடி நிகழும் இடமாற்றங்கள், தனிமனித மையச் சிந்தனைகள் ஆகியவை குடும்ப அமைப்பை மேலும் சிதைத்து வருகின்றன, பெரும்பாலான இளைய வயதினர் சமூக வலைத்தளங்களிலேயே அதிக நேரத்தைச் செலவிடுவதால், உணர்வுரீதியாக மிகவும் கொந்தளிப்பான மனநிலையில் இருக்கிறார்கள். அதேபோல் பல முதியவர்கள் பொருளாதார ஆதரவு கிடைத்தாலும் உணர்வுரீதியாகப் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

இன்றைய இந்திய இளைஞர்களின் வாழ்க்கை முந்தைய தலைமுறைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. கல்விப் போட்டி, வேலைவாய்ப்பு பற்றிய அச்சம், சமூக ஒப்பீடு, சமூக வலைதள அழுத்தம், வெற்றியை நிரூபிக்க வேண்டிய நிரந்தர மனஅழுத்தம் ஆகியவை குழந்தைகள் இளைஞர்களின் மனநிலையைத் தீவிரமாகப் பாதிக்கின்றன. முன்னர் குழந்தைகள் தங்கள் பள்ளி அல்லது சமூகத்துக்குள் மட்டுமே ஒப்பிடப்பட்டனர். ஆனால் இன்று அவர்கள் உலகளாவிய அளவில் தங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். சொந்த வாழ்க்கையின் வெற்றிகள் குறித்த பதிவுகள் மூலம் தங்கள் கொண்டாட்ட மனநிலையை வெளிப்படுத்துகிறார்கள்.

அதேவேளையில், தோல்விகளைத் தாங்கும் திறன் அவர்களிடம் வளரவில்லை. சமூக ஊடகங்கள் உணர்வுகளை வியாபாரப் பொருளாக மாற்றிவிட்டன. எனவே, உணர்வுகளை எப்போதும் போலியாக வெளிப்படுத்தும் நிலைக்கு இளைஞர்கள் ஆளாகியிருக்கிறார்கள். அதனால் கோபம், வெறுப்பு, பயம், வன்மம், அரசியல் பிரிவினை போன்ற எதிர்மறையான பண்புகள் இளைஞர்களை இலக்காக வைத்துப் பரப்பப்படுகின்றன. இதனால், இளைஞர்கள் சிந்திப்பதற்கு முன் உணர்ச்சிவசப்படும் மனநிலைக்குச் செல்கிறார்கள். இது ஆபத்தானது.

இந்தியாவில் சராசரி வாழ்நாள் தற்போது 72 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது. இது மருத்துவத் துறை முன்னேற்றத்தின் அடையாளம். ஆனால் நீண்ட ஆயுள் மட்டுமே மனித வாழ்வின் தரத்தை நிர்ணயிக்காது. சக மனித ஆதரவு இல்லாத முதுமை ஓர் உளவியல் நெருக்கடியை உருவாக்குகிறது. ஓய்வு வாழ்க்கை, சமூகப் பங்களிப்பை இழப்பது, உடல் நோய்கள், குழந்தைகள் வெளிநாடு அல்லது நகரங்களுக்கு இடம்பெயர்தல் ஆகியவை முதியோரிடம் மனச்சோர்வையும் தனிமையையும் அதிகரிக்கின்றன. இந்தியச் சமூகத்தில் முதியவர்கள் ஒருகாலத்தில் அறிவின் அடையாளமாக மதிக்கப்பட்டனர். ஆனால், தொழிலநுட்ப மாற்றங்களும் வேகமான கலாச்சார மாற்றங்களும் அவர்களைச் சமூகத்தின் ஓரத்துக்குத் தள்ளுகின்றன.

மாதிரிப் பதிவு முறை அறிக்கை மேலும் ஒரு முக்கியமான விஷயத்தையும் காட்டுகிறது. இந்தியாவில் பிராந்திய / கிராம-நகர வேறுபாடுகள் இன்னும் தீவிரமாக உள்ளன. பல தென்னிந்திய மாநிலங்கள் சுகாதார அளவுகோல்களில் வட மாநிலங்களைவிட முன்னிலையில் உள்ளன. இந்தச் சமத்துவமின்மை வெறும் வளர்ச்சிப் பிரச்சினை அல்ல; அது உளவியல் பாதிப்புகளையும் உருவாக்குகிறது. பாதுகாப்பின்மை, வறுமை, சமூக அச்சம் நிறைந்த சூழலில் வாழும் மக்கள் உணர்ச்சிரீதியாக அதிகப் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். அத்தகைய சமூகங்கள் பயம், வெறுப்பு, அரசியல் தூண்டுதல்களுக்கு எளிதில் ஆளாகும் அபாயம் உள்ளது. எனவே, இந்தியாவின் மக்கள்தொகை மாற்றத்துக்குப் பொருளாதாரத் திட்டமிடல் மட்டுமல்ல, உளவியல் அடிப்படையிலான சமூகத் திட்டமிடலும் அவசியமாகிறது.

பள்ளிகள் தேர்வு மையங்களாக மட்டுமே இருக்கக் கூடாது. உணர்வு மேலாண்மை, மன அழுத்த மேலாண்மை, சக மனிதர்களுடனான தொடர்பு, முடிவெடுக்கும் திறன், பிரச்சினைகளைக் கையாளுதல், பாதுகாப்பான சமூக வலைதளப் பயன்பாடு போன்றவை கல்வியின் ஒரு பகுதியாக மாற வேண்டும். குழந்தைகள் தோல்வியைச சமாளிப்பது, உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவது. உறவுகளை உருவாக்குவது போன்றவற்றையும் கற்றுக்கொள்ள வேண்டும். அதேபோல் முதியவர்கள் வெறும் பராமரிக்கப்பட வேண்டியவர்களாக மட்டுமே பார்க்கப்படக் கூடாது. அவர்கள் அனுபவத்தால் வழிநடத்தும் பங்கேற்பாளராக மாற வேண்டும். அதற்கான சூழலைத் திட்டமிட்டு உருவாக்க வேண்டும். முதியவர்கள் அனுபவத்தையும் நினைவுகளையும் தருகிறார்கள்; இளைஞர்கள் ஆற்றலையும் புதுமையையும் தருகிறார்கள்.

தலைமுறைகளைப் பிரிக்கும் சமூகங்கள் இறுதியில் இந்தத் தொடர்ச்சியை இழக்கின்றன. இது இந்தியச் சமூகம் எதிர்கொள்ளும் ஒரு முக்கியமான சவால். மருத்துவமனைகள், வேலைவாய்ப்புகள், ஓய்வூதியத் திட்டங்கள் மட்டுமல்லாமல் பாதுகாப்பு தரும் குடும்பங்கள், மனிதநேயமான கல்வி அமைப்புகள், மனநலத்தை மதிக்கும் சமூகங்களை உருவாக்க வேண்டும். இளைஞர்களையும் முதியவர்களையும் இணைக்கும் திட்டங்களும் முன்னெடுக்கப்பட வேண்டும். இளைஞர்கள், முதியவர்களின் எண்ணிக்கையை மட்டும் சார்ந்து இந்தியாவின் எதிர்காலம் அமையப்போவதில்லை. அவர்கள் உணர்வுரீதியாகப் பாதுகாப்பாகவும் சமூகரீதியாக இணைந்தவர்களாகவும் உணர்கிறார்களா என்பதில்தான் இருக்கிறது எதிர்கால இந்தியாவின் வெற்றி.

*- ('இந்து தமிழ் திசை' நாளிதழில் 2-ஜுன் அன்று மருத்துவர் சிவபாலன் எழுதிய கட்டுரை).*

# அன்றாட வாழ்வில் ஆணாதிக்க மொழிகள்

உங்கள் மனைவிக்கு சமையலறையில் நீங்கள் உதவி செய்வீர்களா? என்ற கேள்விக்கு பெரும்பாலான ஆண்கள் ஆமாம் என்று தான் பதில் கூறுகிறார்கள். இப்படி கூறுகிறவர்கள் மிகவும் முற்போக்கானவர்கள் மனைவியை மிகவும் நேசிப்பவர்கள் என்று சமூகம் முடிவு செய்கிறது. சமூக ஊடகங்களில் ஒரு பிரபலமான இணையர்களிடம் பேட்டி எடுத்த போது இந்த பதில் கணவரிடம் இருந்து வந்தது. ஏராளமான லைக்குகளும் சேரும் குவிந்தன.

இதில் அடங்கியுள்ள பாகுபாடு உணரப்படுவது இல்லை! உதவி என்ற சொல் எதைக் குறிக்கிறது? சமையலறை பொறுப்பை ஏற்க வேண்டியது பெண்; அவர் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்கு கணவர் உதவுகிறார். இது கணவருக்கான பொறுப்பு அல்ல! என்பதே உதவி என்று சொல்லுக்கான உண்மையான உள்ளடக்கம்.

சமையல் பெண்களுக்கான பொறுப்பு என்று காலம் காலமாக மூளையில் திணிக்கப்பட்ட சிந்தனையின் தொடர்ச்சியாகவே உதவி என்ற சொல் வருகிறது. இங்கே உதவி என்பது ஒரு சொல் அல்ல; இது கருத்தியல். உதவி என்ற சொல்லுக்குள் மறைந்திருக்கும் அரசியலை கவலையுடன் பரிசீலிக்க வேண்டும். எனது மனைவிக்கு உதவுகிறேன் என்ற வார்த்தை கணவருக்கு பெருமையின் மகுடத்தை சூட்டுகிறது. இப்படி ஒரு கேள்வியை கணவரை அல்லது ஆண்களை மட்டும் நோக்கி ஏன் கேட்க வேண்டும்? மனைவியை நோக்கி கேட்கப்படும் பல கேள்விகள் எப்படி வருகின்றன தெரியுமா? இந்தக் கேள்விகளுக்கு நீண்ட பட்டியலிட முடியும். இந்தக் கேள்விகள் இயல்பானவைதான் என்று கடந்து செல்ல முடியாது. சமூகத்தில் நிலவி வரும் பாகுபாடுகளின் வெளிப்பாடு இவை.

சமூக மாற்றத்தில் பேச்சுகளும்; உரையாடல்களும்; சொற்களும்; மொழியும் முக்கிய பங்களிக்கின்றன. பெண்களிடம் பாகுபாடு காட்ட வேண்டும் என்று ஏதேனும் சட்டம் இருக்கிறதா? அவர்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறதா? அவர்களை அடக்கி ஆள வேண்டும் என்று சட்டம் இருக்கிறதா? அப்படி எந்தச் சட்டமும் இல்லை. இந்த அடிப்படை உரிமையைக் கூட சமூகம் புரிந்து கொள்ளாமல் இருப்பது தான் மிகப்பெரும் அவலம்! ஒவ்வொரு குடும்பத்திலும் இயல்பாக நிகழ்ந்து கொண்டிருக்கும் உரையாடல்களை கவனியுங்கள்.

8 மணி நேரம் அலுவலகத்தில் வேலை செய்துவிட்டு வீடு திரும்பும் பெண்ணிடம் கேட்கப்படும் கேள்வி. **'இரவில் என்ன டிபன் செய்ய முடிவு செய்து இருக்கிறாய்?'** ஆனால் ஒரு ஆண் அலுவலகப் பணியை முடித்துவிட்டு வரும்போது கேட்கப்படும் கேள்வி என்ன தெரியுமா? **'நீங்கள் மிகவும் சோர்ந்து போய் இருக்கிறீர்கள்'**. இங்கே ஆண்களின் சோர்வு கவலையோடு கவனம் பெறுகிறது. பெண்களுக்கான இரவு சமையல் அவர்களுக்கான கூடுதல் சுமையாக்கப்படுகிறது.

அப்பாக்களை சமூகம் எப்படி கொண்டாடுகிறது பாருங்கள்! குழந்தையைப் பேணி பெற்று வளர்க்கும் முழு பொறுப்பையும் ஏற்பவர் அம்மா; அதற்காக சமூகம் அவரை கைதட்டி பாராட்டுகிறதா? ஆனால் அப்பா என்ன செய்கிறார்? உடைமாற்றி விடுகிறார்; சமைத்த உணவை டப்பாக்களில் அடைக்கிறார்; **'இப்போதே சமையலை கற்றுக்கொள் திருமணத்திற்கு பிறகு இதுதான் உனக்கு அவசியம்'** இந்த உரையாடல் ஒவ்வொரு குடும்பங்களிலும் பெண்ணை நோக்கி நடக்கிறது.

சமையல் என்ற கலை வாழ்நாள் தேவையாக இருக்கும் பொழுது அது ஆண்களுக்கும் பெண்களுக்கும் சொல்லப்பட வேண்டும் ஆனால் சமூகத்தில் பெண்களுக்கு மட்டும் தான் அது சொல்லப்படுகிறது. பெற்றோர், ஆசிரியர் கூட்டத்தில் பங்கேற்பார். குடும்பத்தில் யாருக்கு அதிகாரம்? யார் ஓய்வெடுக்க வேண்டும்? யார் இறங்கிப் போக வேண்டும்? என்ற சிந்தனைகள் குழந்தைகளிடம் பதிய வைக்கப்படுகின்றன.

அறிவுரை; நகைச்சுவை; கரிசனம் வழியாகவே பாகுபாடுகள் திணிக்கப்படுகின்றன. பாகுபாடுகள் வெளிச்சப்படுத்திக் கொள்ளாமல் முகமூடி அணிந்து வருகின்றன இது மிகவும் ஆபத்தானது. மீண்டும் மீண்டும் உச்சரிக்கும் வார்த்தைகள் வழியாக இளைய தலைமுறை இடம் நாம் பாகுபாடுகளை கடத்திக் கொண்டிருக்கிறோம்.

**பெண்களிடம் எதை கட்டாயம் எதிர்பார்க்க வேண்டும்; ஆண்களிடம் எதிர்ப்பு காட்டாமல் எந்த வகையில் பணிந்து போக வேண்டும்;**

சமூகத்தில் இயல்பாக திணிக்கப்படும் இந்த சிந்தனைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

~இரா ('ஆங்கில இந்து' இதழில் வெளிவந்த கட்டுரை தழுவல்)

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் நினைவேந்தல்!

கோவை மாவட்டக் கழகத்தினர் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பெரியார் பெருந்தொண்டர், மறைந்த கோவை மாவட்டக் கழகத் தலைவர் பா. இராமச்சந்திரன் அவர்கள் 17.05.2026 அன்று மறைவுற்றார், அவரின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்வு 31.05.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி அளவில் மேட்டுப்பாளையம், கெண்டையூர் பகுதியில் உள்ள இராமச்சந்திரன் இல்லத்தில் நடைபெற்றது.

கோவை மாவட்டச் செயலாளர் பன்னீர்செல்வம், கோவை மாநகரத் தலைவர் நிர்மல் குமார்,கோவை மாநகரச் செயலாளர் வெங்கட் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி இராமசந்திரன் அவர்களின் படத்தை திறந்து வைத்து நினைவேந்தல் உரையாற்றினார்.



கழகப் பொருளாளர் துரைசாமி, கழக மாநில அமைப்புச் செயலாளர் ப. ரத்தினசாமி, கழக சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளாராஜன், தமிழ்நாடு அறிவியல் மன்ற தலைவர் வீ. சிவகாமி, திருப்பூர் மாவட்ட தலைவர் முகில்ராசு, தமிழ்நாடு மாணவர் கழக மாவட்டப் பொறுப்பாளர் விஷ்ணு, தி.க மாவட்டத் தலைவர் ச. வேலுச்சாமி, பவானி நதிநீர் மற்றும் நிலத்தடி நீர் பாதுகாப்பு குழு தலைவர் T. T ரங்கசாமி, த.பெ.தி.க மாவட்டத் தலைவர் து.இராமசாமி, ம.தி.மு.க நகரச் செயலாளர் இக்பால், வி.சி.க மாவட்டச் செயலாளர் தொல்குடிமைந்தன், த.பு.க பொதுச் செயலாளர் இளவேனில், சமுகநீதி கட்சியின் பொதுச்செயலாளர் வெள்ளமடை நாகராசு, தோழர் அறக்கட்டளை சாந்தகுமார், புஇமு மலரவன்,பகுத்தறிவாளர் கழகம் ரங்கராஜ், பெரியார் தொண்டர் இரும்பொறை சுந்தரமூர்த்தி, மருத்துவர் மகேஸ்வரன், இராமச்சந்திரன் அவர்களின் மகள் தென்றல், பேத்தி அமைதி ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினார்.

மேட்டுப்பாளையம் நகரச் செயலாளர் அமுல்ராஜ் நினைவுகளை பகிர்ந்து நன்றியுரையாற்றினார். இந்நிகழ்வில் தி.இ.த.பே அமைப்புச் செயலாளர் கா.சு.நாகராசு, சென்னை, ஈரோடு, சேலம், திருப்பூர், கோவை ஆகிய மாவட்டங்களில் ஒன்றிய, நகர, கிளை கழகப் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

# மடத்துக்குளம் மோகன் நினைவுநாள் பரப்புரைக் கூட்டங்கள்!

மறைந்த மடத்துக்குளம் மோகன் (கழகத் தலைமைக் குழு உறுப்பினர்) அவர்களின் 5-ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மற்றும் தெருமுனைக் கூட்டங்கள் சூன்-1, 2026 திங்கள் காலை 10 மணி அளவில் மடத்துக்குளம் நான்கு வழிச்சாலை சந்திப்பில் தொடங்கியது.

காலை 9.30 மணிக்கு மடத்துக்குளம் மோகன் இல்லத்தில் கழகப் பொருளாளர் துரைசாமி தலைமையில் மாவட்டத் தலைவர் முகில் ராசு முன்னிலையில் மடத்துக்குளம் மோகன் அவர்களின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி புகழ் வணக்கங்களையும் பெரியாரின் கொள்கை முழக்கங்களையும் கழகத் தோழர்கள் எழுப்பினார்கள். நிகழ்விற்கு மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர் கணக்கன் தலைமை தாங்கினார். ஒன்றியச் செயலாளர் சு.சிவானந்தம், ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தோழர்களுக்கு மடத்துக்குளம் மோகன் குடும்பத்தினர் காலைச் சிற்றுண்டி வழங்கி சிறப்பித்தனர்.

தொடக்க உரையாக கழக சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராசன் 'பெரியாரின் கொள்கைகளை, சுயமரியாதைக் கருத்துகளை தோழர் மடத்துக்குளம் மோகன் அவர்கள் பட்டித்தொட்டி எல்லாம் பரப்பியதையும், மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி மூலம் சிறுவர்கள் முதல் முதியோர் வரை நகைச்சுவை உணர்வோடு பெரியாரின் பகுத்தறிவு கருத்துக்களை பரப்பிய பாங்கையும், தன் வாழ்நாள் முழுவதும் பெரியாரியலை வாழ்வியலாக ஏற்றுக்கொண்டு இறுதிவரை வாழ்ந்த மடத்துக்குளம் மோகன் அவர்களின் நினைவுகளையும்" மக்கள் மத்தியில் எடுத்துரைத்தார்.



தொடர்ந்து தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் வீ.சிவகாமி, திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் வழக்கறிஞர் முருகேசன், கோவை மாநகரத் தலைவர் நிர்மல் குமார், திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் இராசு ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக கழகப் பொருளாளர் சு.துரைசாமி நிறைவுறையாற்றினார். தெருமுனைக் கூட்டங்கள் குமரலிங்கம், கொழுமம், ருத்ரா பாளையம் பகுதியில் நடைபெற்றது. கழக சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராசன், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, கழகப் பொருளாளர் துரைசாமி, கோவை மாநகரத் தலைவர் நிர்மல் குமார், திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் இராசு, ஆகியோர் உரையாற்றினர்.

மடத்துக்குளம் மோகன் அவர்களின் மகள் அறிவுமதி தன் உரையில் "தனது தந்தையின் நினைவேந்தல் நிகழ்வை கழகம் தொடர்ந்து ஆண்டுதோறும் நடத்துவதை நெகிழ்ச்சியோடு பதிவு செய்தார். "மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு" என்று கூறிய தந்தை பெரியாரின் கொள்கையை எடுத்துச் செல்லும் கழகத்துடன் தங்கள் குடும்பம் தொடர்ந்து இணைந்து பயணிக்கும்" என்று நன்றியுரையாற்றினார். குமரலிங்கம் பகுதியில் கழகத் தோழர்களின் பரப்புரையைப் பார்த்த வீரமணி என்ற தோழர் தனது மனைவி, தங்கை மற்றும் மகன் என குடும்பமாக தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்று அவர்களுக்கு கழகப் பொருளாளர் துரைசாமி அறிவியல் மன்றத் தலைவர் வீ.சிவகாமி ஆகியோர் புத்தகங்களை வழங்கி சிறப்பித்தனர். நிறைவாக திருப்பூர் வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், இராசசிங்கம், தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் யாழினி நன்றி கூறினார். சிபிஎம் தோழர் க.ஈசுவரன், அய்யப்பன் ஆகியோர் தோழர்களுக்கு தேநீர் வழங்கி சிறப்பித்தார்கள்.

பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக தோழர் மடத்துக்குளம் மோகன் குடும்பத்தினர் ரூ.3,000 வழங்கினார்கள். காலை முதல் மாலை வரையிலான நிகழ்வுகளை மடத்துக்குளம் ஒன்றிய பொறுப்பாளர்கள் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

**முதல் பக்க தொடர்ச்சி..**

அதுவும் அரசுத்தரப்பில் இருந்து முறையிடப்பட்டதால் நீக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. அதுமட்டுமின்றி, திருப்பரங்குன்றம் விவகாரத்தில் தமிழ்நாடு அரசின் நிலைப்பாட்டை உறுதியோடு செயல்படுத்திக் காட்டிய மதுரை காவல் ஆணையர் லோகநாதன், தேர்தலுக்குப் பிறகு 25 நாட்களுக்கு மேல் காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டு, தற்போது தொழில்நுட்பப் பிரிவு ஐஜியாக நியமிக்கப்பட்டுள்ளார். இத்தகைய போக்குகளால் தமிழ்நாடு அரசு எந்த நிலைப்பாட்டை எடுக்கப்போகிறது என்ற குழப்பம் நிலவியது. இந்நிலையில் திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினரும், மின்சாரத்துறை அமைச்சருமான சி.டி.ஆர். நிர்மல் குமார், திருப்பரங்குன்றம் விவகாரத்தில் 2 ஆண்டுகளுக்கு முன்பிருந்த அரசின் நடைமுறையே தொடரும் என விளக்கமளித்துள்ளார்.

இதுதொடர்பாக பத்திரிகையாளர்களிடம் பேசிய அவர், "திருப்பரங்குன்றம் விவகாரத்தில் தெளிவாக கூறியிருக்கிறோம் மக்கள் அமைதியை விரும்புகிறார்கள், இரண்டு வருடத்திற்கு முன்பாக எந்தச் சூழல் இருந்ததோ, அதையேதான் தொடர வேண்டும் என அனைவரும் விரும்புகிறார்கள். மக்கள் அமைதியைத்தான் விரும்புகிறார்கள். இதுதான் அரசின் கொள்கையும் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. எந்த மதவாத சக்திகளும் உள்ளே வந்து அரசியல் செய்ய 100% அனுமதிக்க மாட்டோம்" என தெளிவுபடுத்தியுள்ளார். இவர் முன்பு பாஜகவில் இருந்தபோது மிக மோசமான மதவாத கருத்துக்களை தனது முகநூல் பக்கத்தில் வெளிப்படுத்தியவர். ஆனால் இன்று தனது போக்கில் இருந்து மாறுபட்டு, தவெகவின் நிலைப்பாடாக கூறியிருக்கும் கருத்துக்கள் வரவேற்கத்தக்கவையாகவே உள்ளன. அதேசமயம் பத்திரிகையாளர்களிடம் அளித்த இந்த உறுதியை, ஜூன் 22 -ம் தேதிக்குள் உயர்நீதிமன்ற மதுரைக்கிளையிலும் தெளிவுபடுத்த வேண்டும். முந்தைய திமுக ஆட்சியைப்போல எவ்வித சமரசமும் இல்லாமல் இவ்விவகாரத்தில் தவெக அரசும் உறுதிகாட்ட வேண்டும். ஒவ்வொரு விவகாரத்திலும் நெருக்கடிகள் முற்றிய பிறகு தனது கருத்தை வெளிப்படுத்துகிற போக்கில் இருந்து வெளி வந்து, எந்தவொரு சிக்கலிலும் தனது கொள்கைப்பார்வையை தெளிவோடு தயக்கமின்றி வெளிப்படுத்த வேண்டும்.

# புத்தக வெளியீட்டு விழா!

மேட்டூர்த் தமிழ்ச் சங்கம், வாசகர் வட்டம், மேட்டூர் கிளை நூலகம் சார்பில் ஏற்பாடு செய்திருந்த நூலாசிரியர் அமிர்தம் பீட்டர் ராஜன் அவர்கள் எழுதிய 'தமிழ்ச் சமூகத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும் பகுதி-1 தமிழர்கள் வீழ்ந்த வரலாறு' என்ற நூல் 29.05.2026 வெள்ளிக்கிழமை அன்று மாலை 5.30 மணி அளவில் மேட்டூர், பொது நூலக வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்றார். மேட்டூர் தமிழ்ச் சங்கத் தலைவர் ஆசிரியர் கு. பாரி முன்னிலை வகித்தரார். ஆய்வறிஞர் இரா. இலட்சுமி நாராயணன் வரவேற்புரையாற்றினார். கவிஞர் வை. சரவணன் நூல் அறிமுகவுரையாற்றினார். பேராசிரியர் சிலம்பரசன் நூல் திறனாய்வு செய்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி தமிழ்ச் சமூகத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும் பகுதி-1 தமிழர்கள் வீழ்ந்த வரலாறு புத்தகத்தை வெளியிட்டு சிறப்புரையாற்றினார். எழுத்தாளர் அனுராதா புத்தகத்தை பெற்றுக்கொண்டார். நூலாசிரியர் அமிர்தம் பீட்டர் ராஜன் நூல் ஏற்புரையாற்றினார். மருத்துவர் சந்திரமோகன், எழுத்தாளர் மே. கா கிட்டு, வழக்கறிஞர் சிவராமன், கே. வி ராஜேந்திரன் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர். கோ. பெ. நா. பாரிச்செல்வன் நன்றியுரையாற்றினார். இந்நிகழ்ச்சியை தமிழ்ப் பிரபா நெறியாளுகை செய்தார்.



தமிழர்களின் உரிமைக்கு எதிரி யார்?, சுயமரியாதைத் திருமணம் ஏன்? ஆகிய இரண்டு புத்தகங்கள் கலந்து கொண்ட அனைவருக்கும் வழங்கப்பட்டது. சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தங்கதுரை, சேலம் மாவட்ட இளைஞரணி செயலாளர் பிரபாகரன், தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர் நாகராஜ், முத்துராஜ், கோகுலக்கண்ணன் ஆகிய கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : June 11, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran